2024 ஜூன் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் மானியக் கோரிக்கையில் நான் குறிப்பிட்டேன். பொதுவாக ஒரு நாடு முன்னேற வேண்டுமென்று சொன்னால் அல்லது அந்த மாநிலம் முன்னேற வேண்டுமென்று சொன்னால் அல்லது அந்த மாவட்டம் முன்னேற வேண்டுமென்று சொன்னால், நம்முடைய பகுதி முன்னேற வேண்டுமென்று சொன்னால் பொருளாதாரத்திற்கு வித்திடுவது நம்முடைய சாலைகள்தான். அதனால்தான் இந்த ஆட்சியிலே 40 சதவிகித மூலதனச் செலவை சாலைப் பணிகளுக்கு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்குகிறார்கள். மூலதனச் செலவு என்பது நம்முடைய அரசாங்கத்திற்கு சொத்து சேர்ப்பது. நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக மக்களுக்கு பயன்பாடு இருக்க வேண்டும், அதேநேரத்திலே மூலதனச் செலவு செய்து அரசாங்கத்திற்கு சொத்து சேர்க்க வேண்டும் என்பதற்கு முன்னுரிமை அளிப்பதன் காரணத்தினால்தான், நீங்கள் சொன்னதுபோல் 10 ஆண்டுகளாக பாராமுகமாக இருந்த சாலைகளை எல்லாம் இப்போது எடுத்துக்கொண்டிருக்கிறோம். மாவட்ட முக்கிய சாலை, மாவட்ட இதர சாலை, மாநில நெடுஞ்சாலை என்று மூன்றாக வகைப்படுத்தி ஒவ்வொன்றையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்தக் கேள்வியை நாங்கள் எடுத்துக்கொண்டு, துறை சார்ந்த அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, இந்த நிதியாண்டிலே அப்பணிகளை எடுப்பதற்கு முயற்சி செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

104—

மின்மாற்றி

***22807—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2024 ஜூன் 27

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, 71-வது வார்டு, ESI-A குடியிருப்புப் பகுதியில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, வார்டு எண் 71, ESI குடியிருப்புப் பகுதிக்கு தற்போது ESI (நீலாவதி 3 pole) 500 KVA மின்மாற்றிமூலம் மின்னூட்டம் வழங்கப்பட்டு வருகிறது. மின்மாற்றியின் திறன் தற்போது உள்ள மின்பளுவிற்கு போதுமானதாக இருக்கிறது.

இப்பகுதியில், தாழ்வழுத்த மின் பாதையில் உள்ள மேம்பாட்டுப் பணிகளை விரைவில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில், ESI குடியிருப்பு A பிளாக்கில் எனது கோரிக்கையை ஏற்று, மின்மாற்றி அமைத்துத் தந்ததற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், திரு.வி.க. நகர் பகுதியில் வார்டு எண் 71-ல் பெரம்பூர் ஹை ரோடு, மேட்டுப்பாளையம், கர்நாட்டிக் மில் குடியிருப்பு; வார்டு எண் 72-ல் தாஸ் நகர் 2-வது தெரு, தாஸ் நகர் 8-வது தெரு; அம்பேத்கர் நகர் 2-வது தெரு, திரு.வி.க. நகர் 8-வது தெரு, வ.உ.சி. நகர் 12-வது தெரு, கஸ்தூரிபாய் காலனி B-Block, வாசுகி தெரு, ஜோசப் தெரு; வார்டு எண் 73-ல் கிரே நகர் 2-வது தெரு, பிரகாஷ் ராவ் காலனி, Pensioners Lane; வார்டு எண் 74-ல் பிரிஸ்லி நகர், Tank Bund Road; வார்டு எண் 75-ல் சுப்பராயன் 4-வது தெரு; வார்டு எண் 76-ல் வெங்கடேசபத்தன் தெரு, படவட்டம்மன் கோயில் தெரு, வெங்கட்டம்மாள் சமாதி தெரு, கண்ணம்மாள் தெரு, நாராயண மேஸ்திரி தெரு ஆகியவற்றிலும் மின்மாற்றி

அமைத்துத்தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி பகுதியில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய இடங்களிலே எங்கெல்லாம் குறைந்த மின்னழுத்தம் இருக்கிறதோ அங்கே இருக்கக்கூடிய மின்மாற்றிகளை, தேவையான மின் பளுவிற்கு ஏற்ப மாற்றியமைக்கக்கூடிய பணியினை தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய மின் பகிர்மானக் கழகம் மேற்கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள், அவருடைய தொகுதிக்குட்பட்டிருக்கக்கூடிய வார்டுகள் 71, 72, 73, 74, 75 மற்றும் 76 ஆகியவற்றிலும் மின்மாற்றிகளை மாற்றித் தர வேண்டுமென்று வைத்திருக்கின்ற கோரிக்கையையும் நிச்சயமாக அரசு ஏற்று அந்தப் பகுதிகளிலே மின் பளுவின் தேவையை கருத்திலே கொண்டு, பழைய மின்மாற்றிகளை மாற்றி, புதிய மின்மாற்றிகளை அமைப்பதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள். சென்னையில் பாதி இடங்களின் பெயர்களைச் சொல்லிவிட்டீர்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: என்னுடைய தொகுதியில் உள்ளவற்றை மட்டும் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மின்மாற்றிகளை அமைத்துத் தருவதாகச் சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Strahans Road, Perambur Barracks சாலை சந்திப்பில் எதிர்கால மின் தேவையைக் கருத்தில் கொண்டு அங்கு ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதையும் விரைவில் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் இருக்கின்ற பழைய மின்மாற்றி கட்டமைப்புகளை

[2024 ஜூன் 27

அகற்றிவிட்டு, புதிய box type-இலான RMU-வை அமைத்துத் தந்தால், மழை நேரங்களில் ஏற்படுகின்ற மின் துண்டிப்பையும், பறவையினங்களால் ஏற்படுகின்ற மின் துண்டிப்பையும் தவிர்க்க முடியும். எனவே, அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய துணை மின் நிலையங்களைப் பொறுத்தமட்டிலே தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களுடைய பகுதிகளிலே துணை மின் நிலையங்களை அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறார்கள். அரசு பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற இந்த 3 ஆண்டுக்காலத்திலே இதுகாறும், ஏறத்தாழ 388 துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு நம்முடைய அரசு அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறது. அவற்றில் 330 துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு தேவையான இடங்களைக் கண்டறிந்திருக்கிறோம். அதிலே 246 துணை மின் நிலையங்களுக்கான பணிகளை மேற்கொள்வதற்கு நாம் ஆணைகளை வழங்கியிருக்கிறோம். இப்போது ஒன்றிய அரசு புதிதாகச் சொல்லியிருக்கக்கூடிய RDSS–Revamped Distribution Sector Scheme என்பதன் அடிப்படையில், ஒன்றிய அரசினுடைய பங்களிப்பாக 60 சதவிகிதமும், மாநில அரசின் பங்களிப்பாக 40 சதவிகிதமும் இருக்கக்கூடிய அளவிலே புதிய துணை மின் நிலையங்களை அமைப்பதற்கான திட்ட அறிக்கை ஒன்றினை கேட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 202 துணை மின் நிலையங்களை 2,300 கோடி ரூபாய் அளவில் நிதியைப் பெற்று அமைப்பதற்கான கருத்துருவினை ஒன்றிய அரசினுடைய பரிசீலனைக்கு நம்முடைய அரசு கடந்த 31–2–2023–ல் அளித்திருக்கிறது. அது தற்போதுவரை பரிசீலனையில் இருக்கிறது. எனவே, அதை விரைவுபடுத்தி, ஆணைகள் பெறப்பட்டால், இந்தப் பணிகளை மிக வேகமாக நம்மால் செய்ய முடியும். இதற்கிடையிலே எங்கெல்லாம் அவசரத் தேவை இருக்கிறதோ அந்த இடங்களிலும் நம்முடைய நிதியைக் கொண்டு செய்வதற்கான முயற்சிகளையும் நம்முடைய மின்சார வாரியம் மேற்கொண்டிருக்கிறது. எனவே, அவையெல்லாம் வருகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய இடத்திலும் புதிய துணை மின் நிலையங்கள்

2024 ஜூன் 27]

அமைப்பதற்கும், அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய மற்றோர் இடத்திலும் முறையான மின்சாரம் தடையின்றி வழங்குவதற்கான ஏனைய ஏற்பாடுகளையும் மின்சார வாரியம் நிச்சயமாகச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

105—

கயிறு தொழில்

***38182—திரு. எம்.ஆர். காந்தி:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கயிறு தொழிலை ஊக்குவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தினமாகக் கொண்டாடப்படுகிற இந்த நன்னாளில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பு அளிப்பதிலும் பெரும் பங்காற்றி வருகிற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும், தொழில்முனைவோர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 25,000 ஹெக்டேர் பரப்பில் ஆண்டிற்கு சுமார் 25 கோடி அளவிற்கு தேங்காய் சாகுபடி செய்யப்படுகிறது. தேங்காய் மட்டையிலிருந்து தென்னை நார், கயிறு பித், மதிப்புக் கூட்டப்பட்ட கயிறு பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இம்மாவட்டத்தில் சுமார் 300 தென்னை நார் சார்ந்த தொழில் நிறுவனங்கள் இயங்கி